## உவமைப் பாகுபாடு

**1222. வினை, பயன், மெய், உரு என்ற நான்கே
வகைபெற வந்த உவமத் தோற்றம்.**

(வி–ரை)வினையாகிய தொழில், பயன், மெய்யாகிய வடிவம், உருவாகிய நிறம் ஆகிய நான்கு வகையாக, உவமைகள் தோன்றும், புலிபோல் பாய்ந்தான், மழை விழை தடக்கை, வேய் மருள் பணைத்தோள், தாமரைச் சேவடி. 1

## அவை விரவியும் வரும்

**1223. விரவியும் வரூஉம் மரபின என்ப.**

(வி–ரை) நான்கும் தனித்தனியாக வருவதோடு சேர்ந்தும் வரும். செவ்வான் அன்னமேனி, அவ்வான் இலங்கு பிறை அன்ன இலங்கு வால்வை எயிறு. 2

## உயர்ந்தவையே உவமையாக வரும்

**1224. உயர்ந்ததன் மேற்றே உள்ளுங் காலை.**

(வி–ரை) உவமைப் பொருள் உயர்ந்ததாக இருக்க வேண்டும். மாரி அன்ன வண்கை. 3

## உவமை தோன்றும் நிலைக்களன்கள்

**1225. சிறப்பே நலனே காதல் வலியொடு,
அந்நால் பண்பும் நிலைக்களம் என்ப.**

(வி–ரை)ஒரு பொருளின் சிறப்பு, அதன் நலன், அதன்மேல் கொண்டுள்ள பேரன்பு, அதன் வலிமை இவை உவமை தோன்ற நிலைக்களனாக அமையும். 4

## வேறு களன்

**1226. கிழக்கிடு பொருளொடு ஐந்தும் ஆகும்.**

(வி–ரை) எடுத்துக்கொள்ளுகின்ற பொருள் தாழ்ந்ததாக இருந்தாலும் அதனையும் சேர்த்து ஐந்தாகும். 5

## முதலும் சினையும் பற்றி வருதல்

**1227. முதலும் சினையும் என்று ஆயிரு பொருட்கும்,
நுதலிய மரபின் உரியவை உரிய.**

(வி–ரை) முதற் பொருளுக்கும், சினைப் பொருளுக்கும் தொன்னூலோர் கூறிய மரபின்படி உவமைகள் வரும். மலை போன்ற யானை, நெருப்பினன், சிறுகண் பன்றி. 6

# தொல்காப்பியம் முழுவதும்

## விளக்கவுரை



முனைவர் ச. வே. சுப்பிரமணியன்

மெய்யப்பன் பதிப்பகம்